பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

09 04 2025 12 40
புதன்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. காலநிலை மாற்றம் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாகவும், வாழ்க்கை முறையில் நேர்மறையான மாற்றங்களை உருவாக்குவது தீர்வாக அமையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. ஒரே நாடு – ஒரே தேர்தல் திட்டத்தை அமல்படுத்துவது தேவையற்ற செலவினங்களைக் குறைத்து நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
3. வங்கிகளின் குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதம் பூஜ்ஜியம் புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் குறைக்கப்பட்டு 6 சதவீதமாக மாற்றப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.
4. உலக நாடுகளிடையேயான வர்த்தகப் போரினால் ஏற்படும் மந்தநிலை ஏழை மக்களை வெகுவாக பாதிக்கும் என்று ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. அண்டனியோ குட்ரெஸ் கூறியுள்ளார்.
5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் - ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

காலநிலை மாற்றம் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாகவும், வாழ்க்கை முறையில் நேர்மறையான மாற்றங்களை உருவாக்குவது தீர்வாக அமையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமண மதத்தவர் பின்பற்றும் நவ்கர் மகா மந்திர தின நிகழ்ச்சியை புதுதில்லியில் இன்று அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

நாட்டின் வரலாற்றில் சமணம் முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது என்றும், அறிவுசார்ந்த பங்களிப்பை தந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீர்ப் பாதுகாப்பு, அன்னையின் பெயரில் மரம் வளர்ப்பு, ஏழைகளுக்கு உதவுவது உட்பட 9 உறுதிமொழிகளை நாட்டு மக்கள் அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

உள்ளூரில் தயாரிக்கப்படும் பொருட்களை அனைவரும் வாங்க வேண்டும் என்றும், அதனை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சி என்பது பாரம்பரிய பெருமைகளை உள்ளடக்கியது என்று திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஒரே நாடு – ஒரே தேர்தல் திட்டத்தை அமல்படுத்துவது நாட்டின் நலனில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்காக ஒன்று புள்ளி மூன்று ஐந்து லட்சம் கோடி ரூபாய் செலவிடப்பட்டதாகவும், 2019ஆம் ஆண்டு தேர்தலில் செலவான தொகையை விட இது இரண்டு மடங்காகும் என்றும் அவர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் தொகை அதிகரித்து வரும் நிலையில் இது மேலும் அதிகரிக்கக் கூடும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரே நாடு – ஒரே தேர்தல் திட்டத்தை செயல்படுத்தும்போது இதுபோன்ற தேவையற்ற செலவினங்கள் குறையும் என்றும், அந்த நிதி நாட்டின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும் என்றும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

காங்கிரஸ் கட்சியின் முதுபெரும் தலைவர் திரு குமரி அனந்தன் வயது முதிர்வு காரணமாக சென்னையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 93.

குமரி அனந்தன் உடலுக்கு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் அரசியல் கட்சித்தலைவர்கள் பலர் இன்று நேரில் அஞ்சலி செலுத்தினர். அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

குமரி அனந்தன் மறைவுக்கு தமிழக சட்டப்பேரவையில் இன்று இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

அவரது இறுதி சடங்கு அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தமிழில் சிறந்த இலக்கியவாதியாக குமரி அனந்தன் திகழ்ந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஆளுநர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு தமது இரங்கலை அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், நாடாளுமன்றத்தில் தமிழில் பேசுவதற்கான உரிமையை நிலைநாட்டிய பெருமை அவருக்கு உண்டு என்று தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவையில் வக்ஃஃப் மசோதா குறித்து விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தேசிய மாநாட்டுக் கட்சியினர் இன்று அமளியில் ஈடுபட்டதால் அவை நடவடிக்கை பிற்பகல் ஒரு மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேசிய மாநாட்டுக் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்திய ஒத்திவைப்பு தீர்மானத்தை சபாநாயகர் திரு. அப்துல் ரஹீம் ராத்தர் ஏற்க மறுத்ததையடுத்து, அவை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக கடந்த 2 நாட்களாக அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்யும் வகையிலான மத்திய அரசின் முத்ரா கடனுதவித் திட்டம் கடந்த 10 ஆண்டுகளாக வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் புதிதாக தொழில்தொடங்கிய பலர் பயனடைந்து வருவதாக பாரத ஸ்டேட் வங்கியின் சேலம் மண்டல மேலாளர் திரு. சரவணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

வங்கிகளின் குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதம் பூஜ்ஜியம் புள்ள இரண்டு ஐந்து சதவீதம் குறைக்கப்படுவதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா இன்று தெரிவித்துள்ளார்.

இதன் மூலமாக ரெப்போ வட்டி விகிதம் 6 சதவீதமாகியுள்ளது.

மும்பையில் நடைபெற்ற நிதிக்கொள்கைக் குழுக் கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த திரு. சஞ்சய் மல்ஹோத்ரா, 2025-26ஆம் நிதியாண்டுக்கான நிர்ணயிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு

உற்பத்தி வளர்ச்சி விகிதம் 6 புள்ளி 7 சதவீதத்தில் இருந்து 6 புள்ளி 5 சதவீதமாக குறைக்கப்படுவதாக கூறினார்.

நாட்டில் நடப்பு நிதியாண்டில் சில்லரைப் பணவீக்கம் 4 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிலையான வைப்பு விகிதம் 5 புள்ளி ஏழு ஐந்து சதவீதமாக இருக்கும் என்றும் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

<<<<>>>>

பிம்ஸ்டெக் அமைப்பின் வேளாண் அமைச்சர்கள் மாநாடு நேபாளத்தின் காத்மாண்டு நகரில் இன்று தொடங்கியது.

இதில் மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் மற்றும் இதர உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் விஷயங்கள் உலக அளவில் வேளாண்துறை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் என்று திரு. சிவராஜ் சிங் சௌஹான் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாநாட்டு நிகழ்வுக்குப் பிறகு நேபாள பிரதமர் திரு கே பி சர்மா ஒலி, அந்நாட்டு வேளாண் அமைச்சர் திரு ராம்நாத் அதிகாரி உள்ளிட்டோரை திரு. சௌஹான் சந்தித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

மேலும் இந்தியா – நேபாளம் இடையே வேளாண் துறையில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான ஒப்பந்தங்களும் கையெழுத்தாக இருப்பதாக மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உலக நாடுகளிடையேயான வர்த்தகப் போரினால் ஏற்படும் மந்தநிலை ஏழை மக்களை வெகுவாக பாதிக்கும் என்று ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. அண்டனியோ குட்ரெஸ் தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வர்த்தகப் போர் அனைத்து நாடுகளுக்கும் இழப்புகளை மட்டுமே உண்டாக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு நாடுகளுக்கான இறக்குமதி வரியை அதிகரித்து அறிவிப்பு வெளியிட்டு வரும் நிலையில், திரு. அண்டனியோ குட்ரெஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐ.நா. மாநாட்டு அமைப்பின் பொதுச்செயலர் திருமதி **Rebeca Grynspan** இன்றைய சவால்களைப் பிரதிபலிக்கும் வகையில் உலக அளவிலான வர்த்தக விதிகள் அமைய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள 44 சதவீத வரிவிதிப்பை தளர்த்த வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் திரு. அநுர குமார திசநாயக கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர், அமெரிக்க அதிபர் திரு. டொனல்ட் ட்ரம்ப்புக்கு எழுதியுள்ள கடிதத்தில், இந்த வரிவிதிப்பால் இலங்கையின் பொருளாதாரத்தில் தேக்கநிலை ஏற்படும் வாய்ப்பு உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தங்கள் நாட்டில் இருந்து வாஷிங்டன்னுக்கு குழு ஒன்றை அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் இலங்கை அபதிரின் கடிதம் கிடைத்ததை வெள்ளை மாளிகை உறுதி செய்துள்ளதாக இலங்கையின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அனில் ஜெயந்தா ஃபெர்னாண்டோ அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

<<<<>>>>

சீனாவில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 104 சதவீத வரிவிதிப்பு அமல்படுத்தப்படும் என்று அந்நாடு அறிவித்த நிலையில், ஆசிய பங்குச்சந்தைகள் இன்று சரிவுடன் தொடங்கியது.

ஆசிய-பசிபிக் பங்குகள் ஒன்று புள்ளி ஏழு சதவீத சரிவை சந்தித்தது.

அமெரிக்காவின் **S&P-**500 நிறுவனங்களின் பங்குச்சந்தை மதிப்பு கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 5 புள்ளி 8 ட்ரில்லியன் டாலர் சரிந்துள்ளது.

**<<<<>>>>**

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் - ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன.

அகமதாபாதில் நடைபெறும் இந்த ஆட்டம் இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**